சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 11.03.2020

பி.வா.சா.3 : பாலகுரு, த-பெ. ராமசாமிரெட்டியார்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 6,9,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனது தகப்பனார் ராமசாமிரெட்டியாருக்கு நானும், குருவம்மாளும், கந்தசுப்பையனும் வாரிசுகள் ஆவார்கள். நான் 1971ம் வருடம் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். அதன் பின்னர் எனது பணியின் நிமித்தம் பல வருடம் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். எனது பணி ஆவணங்களை பார்த்தால் நான் எந்ததெந்த ஊர்களில் வேலை பார்த்தேன் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். விருதுநகரில் நான் வேலை பார்த்ததாக எனது பணி ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். நான் எனது தரப்பு எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கந்தசுப்பையன் உயிருடன் இருந்தபோது இந்த வழக்கை நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது வழக்கறிஞர் மூலம் தெரியும். நான் எனது எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும் போது எனது சகோதரர் கந்தசுப்பையன் உயிருடன் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கந்தசுப்பையன் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை தெரிந்துகொள்ள வேண்டும் என்று என் வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். கந்தசுப்பையன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். அவருடைய எதிர்வழக்குரையில் மூத்த மனைவியாக லட்சுமி அம்மாள் என்பவரை குறிப்பிட்டுள்ளார் என்பதை படித்துப்பார்த்தேன். மேலும் லட்சுமி அம்மாள் மூலமாக ராஜலட்சுமி என்ற மகள் இருப்பதாகவும் அவர்கள் மூலம் சாந்தி செந்தில் குமார் ஆகியோர்கள் இருப்பதாகவும் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார். மேற்படி விவரங்கள் பொய் என்பதை வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். லட்சுமி அம்மாள், ராஜலட்சுமி, சாந்தி, செந்தில்குமார் ஆகியோர் இருக்கிறார்களா என்றால், எனக்கு தெரியாது. நான், எனது தம்பி, தங்கை ஆகியோர் மட்டுமே ராமசாமிரெட்டியாரின் வாரிசுகள் என்று சாட்சி கூறுகிறார். சாந்தி, செந்தில்குமார் ஆகயோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சாந்தி, செந்தில்குமாருடைய தாயார் ராஜலட்சுமி அம்மாள் என்ற விவரம் தெரியும் என்றும் அதை மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

ராமசாமி ரெட்டியாருடைய வாரிசாக லட்சுமி அம்மாள் மற்றும் ராஜலட்சுமி அம்மாள் ஆகியோர்கள் என்பதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி ரெட்டியாருக்கு சொந்தமான சொத்துகளை பொறுத்து இந்த வழக்கு நடந்துவருகிறது என்றால் சரிதான். பிராது சொத்தில் 24 லக்கம் என்று சொன்னால் சரிதான். குருவம்மாள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னிடம் கேட்டார்களா என்று சொன்னால் என்னிடம் கேட்கவில்லை. பிராதில் முதலில் எத்தனை லக்க சொத்துக்கள் காட்டப்பட்டது என்று சொன்னால் 24 லக்க ்சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. நான் முதலில் இந்த வழக்கில் ஆஜரானேனா அல்லது பின்னால் மனு தாக்கல் செய்து சேர்ந்துள்ளேனா என்றால் பின்னால் மனு தாக்கல ்செய்து சேர்ந்து கொண்டேன். குருவம்மாள் பிராது தாக்கல் செய்யும்போது 20 லக்க சொத்துக்களை காட்டினார்கள் என்று சொன்னால், சரியல்ல. கந்தசுப்பையன் தரப்பில் 21 முதல் 24 வரை சொத்துக்கள் விடுபட்டுவிட்டது என்பதை சுட்டிக்காட்டியபிறகு குருவம்மாள் சீர்திருத்தம் செய்து சேர்த்துக்கொண்டார் என்றால் சரிதான். நானும் குருவம்மாளும் எங்களுக்கு சொத்தில் அனுபவம் இல்லாதால்தான் சரியான விவரங்களை காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. கந்தசுப்பையன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்ததாக சொல்லியிருந்தார் ஆனால் அது தவறு. காலம் சென்ற ராமசாமி ரெட்டியார் உயிருடன் இருந்தபோது 1 முதல் 16 லக்க சொத்துக்களை அவர் வைத்துக்கொள்வது என்று வாய்மொழியாக ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொன்னால் தவறு. அந்த சொத்துக்களளை ராமசாமி ரெட்டியாரும். கந்தசுப்பையனும் கூட்டாக அனுபவம் செய்துகொள்ள வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொள்ளப்பட்டது என்றால் தவறு. நான ்அரசுப்பணியில் இருந்ததால் எனது தகப்பனார் அது போன்று வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொண்டார் என்றால் தவறு. ராமசாமி ரெட்டியார் 1987ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசு சான்று வாங்கவில்லை. அவர் இறந்தபிறகு 1 முதல் 16 லக்க சொத்துக்களை கந்தசுப்பையன் அனுபவித்து வந்தார் ஏன்றால் சரியல்ல. அதுவும் எனது தகப்பனாரின் வாய்மொழி ஏற்பாட்டில்தான நடந்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 17,19 மற்றும் 20 வீடாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19 வது லக்க சொத்தை கந்த சுப்பையன் அனுபவம் செய்து

வந்து, 20வது லக்க சொத்தை நான் அனுபவம் செய்வதற்கும் வாய்மொழி ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 17வது லக்க சொத்து வீட்டில் கந்தசுப்பையன் இறக்கும் வரை குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. கந்த சுப்பையன் இறக்கும் போது இருந்த வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. வாய்மொழி ஏற்பாட்டின் பெயரில் உள்ள கந்தசுப்யைனுக்கு கிடைத்த வீட்டில்தான் கந்தசுப்பையன் குடியிருந்தார் என்றும் அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி ரெட்டியார் சாகும்வரை எந்த ̇வீட்டில் குடியிருந்தார் என்று சொன்னால் 17வது லக்க சொத்தில் குடியிருந்தார். 17,19 மற்றும் 20வது லக்க வீடுகளைப்பொறுத்து எனக்கு அடையாள அட்டை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது பெயர் எனது வடமலைக்குறிச்சி கிராமத்தில் வாக்காளர் பட்டியலில் 2013ம் ஆண்டுவரை இருந்ததா என்றால் இருக்கலாம். அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாககல் செய்ய முடியும். எனக்கு 1970ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் தேதி எனக்கு திருமணமானது. எனது சகோதரி குருவம்மாளுக்கு எந்த வருடம் திருமணமானது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு திருமணமாகி 8 வருடத்திற்கு பின் வாதி குருவம்மாளுக்கு திருமணமானது. குருவம்மாளின் கணவர் போாத்தநேரியை சேர்ந்தவர் அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அவர் உயிருடன் இல்லை சுமார் 12 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். சாட்சி தற்போது சொல்கிறார் குருவம்மாளின் கணவர் பெயர் சத்தியமூர்த்தி. குருவம்மாளுக்கும் சத்தியமூர்த்திக்கும் 3 குழந்தைகள் உள்ளனர்.2 பெண் குழந்தைகளும். ஒரு ஆண்குழந்தையும் உள்ளனர். இவ்வழக்கில் அவர்கள் பின்னால் வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். வழக்கு சொத்தினை பொறுத்து நான், கூட்டு அனுபவத்தில் இருப்பதை காட்ட பட்டா, ரசீது ஆகிய ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் என் வசம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது அதனை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. என் அப்பா பெயரில் சொத்துக்கள் உள்ளதால் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா இறந்தவுடன் 1987க்கு பிறகு சொத்துக்களை பிரிவினை செய்யாமல் இருந்ததற்கு காரணங்களை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. 1987க்கு முன்பாகவே பாகப்பிரிவினை நடந்துவிட்டதால்தான் நான் முன்பே பாகப்பிரிவினை

கேட்கவில்லை என்று சொன்னால சரியல்ல. ராமசாமி ரெட்டியாரின் தகப்பனார் பெயர் வாலகுரு ரெட்டியார் என்றால் சரிதான். ராமசாமி ரெட்டியாருக்கு இந்த சொத்துக்கள் அவரது தகப்பனாரிடம் இருந்து கிடைத்தா என்றால், அவரது பூர்வீக சொத்துக்கள். ராமசாமி ரெட்டியாருக்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. சொத்துக்களின் அனுபவத்தில் நான் இல்லை என்பதால்தான் பட்டா பற்றிய கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்லமுடியவில்லை ௭ன்று சொன்னால் சரியல்ல. ஒவ்வொரு இலக்க சொத்திலும் என்னென்ன விவசாயம் செய்யய்ப்பட்டது என்று என்னால் சொல்லமுடியும். எனது தகப்பானார் இறந்தபிறகு ஒவ்வொரு இலக்க சொத்திலும் விவசாயத்தில் எவ்வளவு வருமானம் கிடைத்தது என்றால் எனக்கு தெ்ரியும். அந்த நிலங்களுக்கான வரி கந்தசுப்பையன்தான் செலுத்திவந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்தவருடமாவது வரி செலுத்தியுள்ளேனா என்றால் நான் நேரடியாக கட்டவில்லை. நான் கந்தசுப்பையன் மூலமாக என் அப்பா பெயரில் வரி கட்டியுள்ளேன்.

(6,9,10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)